பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின்


# முற்றம்

செய்தி இதழ்

ஆண்டு 08 இதழ் 03





கலை நாயகன் தி. சாம்சன் அவர்களை


முற்றம் சார்பில் வாழ்த்துகின்றோம்





0,50€ - கலைவழி இறைபணி - SERVIR DIEU PAR L'ART -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34 வது இதழ்

# தொலைந்துபோன சந்தோசங்கள்!

வண்ணைதெய்வம்

காலைப்பொழுது என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் புத்துணர்ச்சி கொடுக்கும் உன்னதமான பொழுதாகும்! நேற்றைய களைப்புக்கள் அனைத்தையும் இரவுத் தூக்கத்தோடு துரத்திவிட்டு மீண்டும் புது மனிதர்களாக பிறந்ததுபோல புத்துணர்ச்சியுடன் செயல்ப்படுவதற்கான இனிய பொழுதான் காலைப்பொழுது.

பனித்துளிகளால் இரவு முழுவதும் குழித்திருந்த புற்கள் தொடங்கி மரம், செடி, கொடிகளும் காக்கை குருவிகளோடு எங்கள் இல்லங்களில் எங்களில் ஒருவராக வாழ்ந்துவரும் ஆடு, மாடு, நாய், பூனை இப்படி இப்படியாக அனைத்து உயிர்களும் துயில் களைந்து, சோம்பல் முறித்து, அன்றாடம் பணிகளுக்காக தங்களைத் தயார்படுத்துவதற்கும், எமக்கு புத்துணர்ச்சி தருவதற்கும், இயற்கை எமக்குத்தந்த இனிய பொழுதுதான் காலைப்பொழுது.

நான் புலம் பெயர்ந்து பிரான்ஸிற்கு வந்து இருபத்தி ஐந்து வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது! இந்த வெள்ளிவிழா வாழ்க்கையில் எனக்குப் பெருமையோ அல்லது சந்தோசமோ எதுவுமே கிடையாது. ஆனால் இந்த இருபத்தைந்து வருடங்களாக அந்த இனிய காலைப்பொழுதின் இன்பமான உணர்வுகளையெல்லாம் தொலைத்துவிட்டு வாழ்கின்றேனே என்னும் கவலை எனக்குண்டு.

காலையில் எங்கள் தூக்கம் கலைவதற்கு முன்பதாகவே ஜன்னலின் கம்பிகளுக்கூடாக கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் எங்கள் போர்வையையும் தாண்டி உடலைக் கிள்ள, எமக்கு முன்னதாகவே விழித்து தமது அன்றாடக் கடமைகளுக்காகப் புறப்பட்டுவிட்ட காக்கை, குருவிகளின் கீச்சுக் குரல்களின் ஓசைகள் கவிதைகளைப்போல நம் காதுகளில் தேனாக ஒலிக்கும்.

விடிந்ததும் விடியாததுமாக திறந்துவிடப்படும் வாசற்கதவுகளும், அக்கம் பக்கமாக அடுத்தடுத்த வீடுகளில் நெருக்கமாக வாழும் எமது உறவுகளின் குழந்தைகளின் குதூகலச் சிரிப்பொலிகளும், பள்ளிக்கூடத்திற்குப் புறப்படத் தயாராகும் சிறுவர்களின் ஆர்ப்பாட்டங்களும்! ம்ம்மா எனத் தாய்ப்பசு குரல்கொடுக்க நாலுகால்ப் பாய்ச்சலில் துள்ளிக் குதித்துவந்து தாயின் முலையை முட்டி, முட்டி பால் குடிக்கும் கன்றுக்குட்டியின் ஆனந்தமும், எமது கால்களையே சுற்றிச்சுற்றி வந்து தம்மை ஒரு தடவையாவது தடவிக் கொடுக்கமாட்டோமா? என எமது முகத்தை அண்ணாந்து பார்த்தபடியே நிற்கும் எங்கள் வீட்டுச் செல்ல நாய்களும், இன்னும் இன்னும் இத்தியாதி இத்தியாதிகள். இவைகளையெல்லாம் நான் தொலைத்து இருபத்தி ஐந்து வருடங்களாகப் போகின்றது.

இருபத்திநான்கு மணி நேரமும் கதவுகள் மூடப்பட்ட அறைகளுக்குள் வாழ்கின்ற ஒரு அடிமைத்தனம் போன்ற வாழ்க்கையில் நேற்றைய வேலைக் களைப்பின் உடல் வலி தீருமுன்னரே இன்றைய காலை விடிந்துவிட, கடிகார அலாரம் அடித்தாலும் உடன் எழுந்துவிட முடியாத உடல் அலுப்பு. ஆனாலும் எழுந்தே ஆகவேண்டிய கட்டாயம்! ஏனெனில் இங்கெல்லாம் நாங்கள் எங்கள் அன்றாடக் கடமைகளை அந்தந்த நேரத்திற்குள் செய்து முடித்துவிட வேண்டும், காலைக் கடன்களை கழிப்பதில் இருந்து கோப்பியோ, தேத்தண்ணீரோ குடிப்பதுகூட நேரக்கணக்கு வைத்தே செய்யவேண்டும். ஒரு நிமிடம் பிந்தினாலும் நாம் வழமையாகச் செல்லும் பேருந்து, தொடருந்து போன்றவற்றை தவற விட்டுவிட வேண்யதாகிவிடும்!

வானமே இடிந்து வீழ்ந்தாலும் வேலைக்கு குறித்த நேரத்திற்குச் செல்ல வேண்டும். ஒருநாள் இரண்டுநாள் தாமதத்திற்கான காரணத்தை பேருந்துகள் மீதும் சுமத்தலாம். அந்தக் காரணத்தையே தொடர்ந்து கூறினால் வீட்டினிலேயே நிரந்தரமாகக் இருக்கவேண்டியதுதான். அதன்பின் மீண்டுமொரு வேலையைத் தேடிக்கொள்வதற்கு எத்தனை மாதங்களாகுமோ? எத்தனை வருடங்களாகுமோ? ஆதலால் நாங்கள் இங்கு நேரத்தை பொன்னைவிடப் பெரிதாக மதிக்கவேண்டியுள்ளது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய எனது தாயக வாழ்க்கையில் இப்படியான அவசரங்களும், பரபரப்புக்களும் ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் புலம்பெயர்ந்த இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் இயந்திரத்தனமாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்!

மேலை நாடுகளில் பல வேலைகளை இயந்திரங்களே செய்கின்றன! அந்த இயந்திரங்களில் கூட அந்தந்த நேரங்களில் அந்தந்த வேலைகளை தானாக செய்கக்கூடிய உயர்தரமான இயந்தரங்களும் உண்டு! நாங்களும் அப்படித்தான் அந்த உயர்தரமான இயந்திரங்களுக்குச் சமமான மனித இயந்திரங்கள்.

இந்த வாழ்க்கையில் பணம், பொருள், வீடு, மனை, என்று சொத்துக்கள் பலவற்றைச் சம்பாதித்திருக்கின்றோம். அதே நேரத்தில் பலவிதமான நோய்களையும் கூடவே சம்பாதித்து வைத்திருக்கின்றோம்.

இப்பொழுதுதான் தொலைந்துபோன அந்தக் காலைநேரச் சந்தோசங்களை நாங்கள் எல்லோருமே தேடிக்கொண்டிருக்கின்றோம்,

■ ■ ■ ■

**தொடர்புகளுக்கு:**
**A.V.Damian**
**8Bd. Raymond Poincaré (Esc.6)**
**94170 Le Perreux - France**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடத்தும் தகமை உடையது

-பொ. கனகசபாபதி.



ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையில் சிந்திக்கின்றனவா? திருவள்ளுவரின் காமத்துப் பால் பலருக்கு தெரிந்திருக்கலாம். அது ஆண்பாலாரும், பெண் பாலாரும் ஒரே விடயம் பற்றி வெவ்வேறு விதமாகச் சிந்திப்பார்கள் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாக அமைகிறது.

**இம்மைப் பிறப்பில் பிரியலாம் னென்றேனாக்**
**கண்ணிறை நீர் கொண்டனள். (1315)**

இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம் என்று காதலன் சொல்கிறான். அவன் சிந்தனை இப்பிறப்பு நன்றாக அமையவேண்டும். நாம் இன்பம் கொழிக்க வாழவேண்டும் என்ற வேட்கையோடு நின்று விடுகிறது. அவளோ வித்தியாசமான முறையில் சிந்திக்கிறாள். இவன் இப்பிறப்பை மட்டும்தானே சொல்கிறான். அப்படியானால் அடுத்த பிறவியில் பிரியலாம் என்கிறானா? அப்படியானால் நாம் அடுத்த பிறவியில் பிரிந்து விடுவோமா? கிடைத்ததை அனுபவிக்காமல் கிடைக்காததைப் பற்றி எண்ணுகிறாள். கண்கள் கண்ணீரால் நிரம்பி விடுகின்றன. இன்னொரு குறள்

**வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று (1317).**

அருகே இருந்தாள். அன்பாகச் சல்லாபம் செய்து கொண்டிருந்தாள். சமய சந்தர்ப்பம் தெரியாமல் தும்மல் வந்துவிட்டது. தும்மினேன். அவளும் வழமை போன்று **நூறாண்டு வாழ்க என வாழ்த்தினாள்** இது என்ன? அவள் கண்களில் கண்ணீர். ஆனந்தக் கண்ணீராக இருக்கமுடியாது. அவள் மனத்தில் ஏதோ நிரடல். அதன் விளைவே இக்கண்ணீர். அவள் சிந்தனை வேறு விதமாகச் சென்றுள்ளது. **என்னருகில் இருந்த இவன் தும்முவதற்குக் காரணம் யாரோ? இவனைப் பற்றி எண்ணுவது தான். அவள் நிச்சயமாக ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அப்போ இவன் இதயத்தில் இன்னொரு பெண் அமர்கிறாள் போலும்** என எண்ணிய அவளுக்கு கண்கள் கண்ணீரால் நிரம்ப அவனை நோக்கி வினவுகிறாள்.

**யார் உம்மை நினைத்ததால் தும்மினீர்?**

வள்ளுவர் சொல்வதற்கு முன்பாகவே கூட ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையிலே தான் சிந்திக்கிறது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆணிற்கும் பெண்ணிற்கும் வெறும் பாலியல் வேறுபாடு மாத்திரமல்லாது உடற்தொகுதியின் ஒவ்வொரு கூறிலேயும் வேறுபாடு இருப்பதைக் காணமுடியும்.


பெற்றோர்களினது முட்டை மற்றும் விந்தில் வரும் நிறமூர்த்தங்களும் அவற்றிலே அமைந்த பரம்பரை அலகுகளும் முளையத்தின் பாலியலைத் தீர்மானிக்கின்றன. விருத்தியுறும் முளையம் ஆணாக விருத்தியுறுமா? பெண்ணாக விருத்தியுறுமா? என்பது கருக்கட்டப்படும்போது தான் தீர்மானிக்கப்படுகிறது. பாலியல் தீர்மானிக்கப்பட்டதும் ஓமோன்கள் தோன்றி எங்கும் செல்கின்றன. முளையம் படிப்படியாக விருத்தியுறுகிறது. அங்கங்களும் அங்கத் தொகுதிகளும் விருத்தியடைகின்றன. ஓமோன்கள் விருத்தியுறும் மூளையின் உள்ளேயும் செல்கின்றன. விருத்தியுறும் மூளை இந்த ஓமோன்களால் நெறிப்படுத்தப்பட்டு பிரத்தியேகமான முறையில் விருத்தியடைகின்றது. குழந்தை பிறந்த பின்னர் அது பெறுகின்ற கல்வியறிவும், பட்டறிவும் சேர்ந்துகொள்ள பிள்ளை முழுமையாவதைக் காணலாம்.

பெண்களைப் பொறுத்த மட்டிலே எஸ்திரோஜன் (Estrogen) எனப்படும் ஓமோன் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்களுடைய கல்வி அறிவு, சிந்தனை, நினைவுத் திறன் ஆகியவற்றுடன் எஸ்திரோஜன் நெருங்கிய சம்பந்தமுடையது. பொதுவாகவே ஆண்களுடைய மூளை அதே வயதுடைய பெண்ணினதிலும் பார்க்க பெரிதாகவே இருக்கும். மூளையினை இருவகைக் கலங்கள் உருவாக்குகின்றன. அவை நரம்புக் கலங்களும்(Neurons) நரம்புப் பசையிழையக் கலங்களும்;(Neuroglea) ஆகும். நரம்புக் கலங்களே மூளையினது தொழிற் பாட்டிற்கு காரணமாகின்றன. இந்நரம்புக் கலங்கள் சிறுசிறு மூளைகள் மூலம் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன. முளையினது பிரதானமான பாகம் முளையம் (Cerebrum) எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பரப்பு முழுவதுமே பல நெளிந்த பீடங்களையும் சால்களையும் கொண்டிருக்கும். நேர்கோட்டினிலே அமைந்த ஆழமான ஒரு சால் மூளையத்தை இரு அரைக் கோளங்களாகப் (Cerebral hemispheres) பிரிக்கின்றது. அவை இடது மூளைய அரைக்கோளம், வலது மூளைய அரைக்கோளம் என அழைக்கப்படுகின்றன. ஆண்களின் மூளை பெண்களினதும் பார்க்கப் பெரிதாக இருந்தாலும் கூட பெண்களினது இடது மூளைய அரைக்கோளத்தில் உள்ள நரம்புக்கலங்களின் தொகை ஆண்களினதும் பார்க்கப் பெருமளவு அதிகம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.



இந்தப் பாரபட்சம் இதனுடன் நின்றுவிடவில்லை. நரம்புக்கலங்கள் ஒன்றோடொன்று தொடர்புறுவது அவற்றின் நரம்பு முளைகள் சுரக்கும் இரசாயனப் பொருள் ஒன்றின் மூலமாகவே. இந்த இரசாயனப் பொருள் டோபமைன் (Dophamine) எனப்படுகிறது. பெண்களிலே இந்த டோபமைன் கூடிய செறிவில் சுரக்கப்படுகிறதாம். இதனால் வேகமாகவும் சிறப்பாகவும் பெண்ணினது நரம்புக்கலங்கள் செயற்பட முடிகிறது.

இடது மூளைய அரைக்கோளம் செவிமடுத்தல் மற்றும் உரையாடுதலுடன் சம்பந்தப்படுகிறது. வலது மூளைய அரைக்கோளம் சுற்றுச் சூழலை உணர்தல், மற்றும் வாழிடத்தோடு சம்பந்தமான செயல்களுடன் தொடர்புடையது. மேறியான் லெகாற்ரோ(Marianne Legato) எனும் பெண்மணி **ஆண்கள் ஏன் நினைவில் வைப்பதில்லை, பெண்கள் ஏன் ஒரு பொழுதும் மறப்பதில்லை** எனும் ஒரு நூல் எழுதியுள்ளார். (Why men never remember and Women never forget) **சில சமயங்களிலே ஆண்களுடன் பேசுவது கற்சுவரிலே தலையை மோதிக் கொள்வது போல உள்ளது** என விரக்தியுடன் லெகாற்றோ கூறுகிறார். **சொல்லுவது எதனையும் அவர்கள் செவி மடுப்பதில்லை அல்லது நாம் சொல்வதால் அவர்கள் எரிச்சலடைகிறார்கள். நாம் சொல்வதற்கான பதில் அவர்களிடமிருந்து வருவதுமில்லை, அப்படி வந்தாலும் அவை சரியான பதில்களாக அமைவதில்லை** என ஆண்களை முற்றாக மட்டம் தட்டி விடுகிறார் லெகாற்ரோ.

ஆண்களது மூளை ஒரு சமயத்தில் ஒரு விசயம் பற்றியே சிந்திக்கிறது எனவும் சம்பந்தப்பட்ட வேலையிலிருந்து ஏனைய கவன ஈர்ப்புக்களை நிராகரிக்கும் அற்புத திறமை ஆணின் மூளைக்கு உள்ளதாகவும் கூறும் லெகாற்ரோ பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடாத்தும் தகமை உடையது எனவும் கூறுகிறார்.

எனவே தான் **ஆண்கள் பத்திரிகை படிக்கின்ற சமயத்திலோ அல்லது தொலைக்காட்சி பார்க்கின்ற சமயத்திலோ அவர்களுடன் ஏதாவது முக்கிய விடயங்கள் பற்றிச் சர்ச்சையில் ஈடுபடவேண்டாம். அவர்கள் நிச்சயமாக செவியில் அதனை ஏற்கமாட்டார்கள். ஆகவே பின்னர் அது பற்றி வருந்துவதில் ஒரு விதமான பிரயோசனமும் இல்லை** என்கிறார்.

ஆண்கள் பேச்சற்ற சைகைகளைக் கவனிக்கவேமாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு எப்பொழுதும் சொல்லாலே தான் விசயத்தை எடுத்துக் கூறவேண்டும் என்பது லெகாற்ரோவின் கருத்து. பெண்கள் பேச்சு மற்றும் இடம் சம்பந்தமான செயல்களில் சம்பந்தப்படும் பொழுது மூளையினது கூடுதலான பகுதியைப் பிரயோகிக்கிறார்கள் என ஆய்வுகள் தெரியத்தருகின்றன.

மேறியான் லெகாற்ரோ போலல்லாது கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக போராசிரியர் பேறன்-கோகன் (Baron-Cohen) கொஞ்சம் ஆண்களுக்குச் சாதகமாகக் குறிப்புக்கள் தருகிறார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே காணப்படும் மூளையின் அமைப்பு வேறுபாடு வெறும் கூர்ப்பு விளைவான இசைவாக்கங்களே என்கிறார். இதற்கு மனித இனம் தோன்றிய காலத்திற்கு நாம் செல்லவேண்டும். அக்காலத்திலே ஆண்மகன் இடமறிந்து, வழிகண்டு வனத்தினூடாக உலாவி, கருவி கொண்டு உணவுக்காகவும், பாதுகாப்புக்காகவும் விலங்குகளைக் கொன்று இயற்கையைத் தன்வசமாக்க முயன்றான். மூளை அதற்கேற்ப சிறத்தலடைந்தது. பெண்ணோ இல்லத்தில் தங்கி குழந்தைகளைப் பராமரித்தாள். இல்லத்தின் தேவைகளை ஈடுசெய்தாள். இதன் விளைவாக அவளது மூளை உறவுகளை ஏற்படுத்துவதற்கும், மொழியினைப் பாவிப்பதற்கும் பேச்சு அற்ற சைகைகளைப் புரிந்து கொள்வதற்கும் இசைவு பெற்றது.

பேறன்-கோகனின் கருத்துப்படி பெண் எப்பொழுதுமே மற்றையோருடைய நல் அபிப்பிராயத்தினைப் பெற்று இன்னொருத்தருடைய ஆளுமையில் வாழுவதற்கேற்றவாறு அவளது மூளை விருத்தியுறுகிறது. ஆனால் ஆணினது

மூளையோ முறைமைகளைப்பற்றி அறியவும் அவற்றினை உருவாக்கவும் ஏற்றவகையிலே உருவாகிறது.

**ஆணினது மூளைக்கும் பெண்ணினது மூளைக்கும் இடையே உள்ள வேறு சில வேறுபாடுகள்:**

பெண்கள் பொதுவாகவே ஏனையோருடன் அன்பின் விளைவான பரிவர்த்தனை செய்யும் உறவினை நாடுவார்கள். ஆண்களோ தமது அந்தஸ்தையும் அதிகாரத்தையும் காண்பிக்கும் உறவினை விரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் சமத்துவமான தோழமையோடு பழகுதற்கும் விரும்புவார்கள். ஆண்களோ ஒரே தன்மையான அக்கறை கொண்டோருடனும் சரியான போட்டி தரக்கூடியவரையுமே விரும்புவார்கள். பெண்கள் வெறுமனே பொழுது போக்கிற்காகவும், பழகவேண்டும் என்பதற்காகவுமே மற்றையோருடன் கலந்துரையாடுகிறார்கள். ஆண்கள் தமது அறிவு, ஆற்றல் மற்றும் திறன்களை காட்டுதற்காகவே சம்பாசிக்கிறார்கள். பெண்கள் பொதுவாக மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில் அக்கறை காட்டுவார்கள். ஆண்கள் மற்றவர்களைப் பற்றிப் பேசுவதிலும் பார்க்க ஏதாவது பொருட்கள் பற்றிப் பேசவே நாட்டம் காட்டுவார்கள். இன்னும் பல சொல்லலாம். நான் சொல்லாமல் விட்டதை நீங்கள் சேர்த்துக்கொள்ளுங்கள். இந்தப் பட்டியல் தொடரும்.

---

கருத்தாடற் களம்

## என்று தணியும் இந்த சுதந்திர தாகம்!
## என்று தணியும் இந்த அடிமையின் மோகம்!!

மேற்சொன்ன தலைப்பில் முற்றத்தில் வெளிவந்த நந்தினி, சி. கிருஷ்ணர் ஆகியோரது கட்டுரைகளை படிக்க வாய்ப்புக்கிட்டியது. இவை முற்றத்தில் விவாதம் பண்ண வந்திருக்கிறதா? அல்லது விளக்கம் சொல்ல வந்திருக்கிறதா! தெரியவில்லை. நந்தினி அவர்களே **பெண்ணின் சுதந்திரதாகம்** ஆக இவ்வளவும் தானா? மிகுதி எங்கே? எவ்வளவு கனமான ஒரு விடயம். ஏன் ஆழமாக, அடித்துச் சொல்ல முடியாமல் போய்விட்டது. மேலும் சி. கிருஷ்ணர் அவர்கள் தமிழ் கலாச்சாரத்தை சிதைக்கும் வகையில் தன்பங்கிற்கு **ரோமாபுரியில் வாழ்வதானால் ரோமனைப்போல் வாழக் கற்றுக்கொள்** என்கிறார். இந்த உதாரணத்தைப் படித்தபோது ஒரு சின்னச் சினப்பு **சுளீர்** என்று நிஜமாக என்னில் ஏற்பட்டது.

**தமிழர்** என்று ஒரு இனம். அவர்களுக்கு ஒரு மொழி, பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் இருக்கின்றது. எங்கே சென்று வாழ்ந்தாலும் அவைகளைச் சீரழிக்கின்ற எந்த உதாரண வசனங்களும் எம் சிந்தையில் பதியவேண்டாம். தமிழனின் கலாச்சார அடையாளங்கள் எந்த மோகத்திற்காகவும் அழிந்து போகக்கூடாது. அன்னை திரேசா என்ற மாபெரும் சேவகி பற்றி உதாரணம் பேசவேண்டாம். ஆனால் .... திருமதி சோனியா காந்தி அவர்கள் புகுந்த வீட்டு கலாச்சாரத்தைத் தான் (வாழும் நாட்டு) பின்பற்றுகின்றார்கள். நாங்கள் - தமிழர்கள் அப்படியல்லவே!

உடைபற்றிய விவாதம் வந்திருக்கிறது. வேலைக்கு போகும் பெண்கள் இந்த **சாரி** விவாவதத்திற்குள் அடங்கவில்லை என நந்தினி அவர்கள் தெளிவாக குறிப்பிட்டுவிட்டார்கள். இப்போ... வேலைக்குப்போகாத, வேலை நேரம் தவிர்ந்த மாற்று நேரம் பற்றிய ஆடை அணிகலன்கள் பற்றிய விவாதமே முக்கியமானது. **நாகரீகம் என்றால் என்ன?** தலைவிரிகோலம் தான் நாகரீக முன்னேற்றத்தின் முதல் அடையாளச் சின்னமா? கோயிலுக்குச் செல்லும்போது கூட ... தலைவிரி கோலத்துடன், ஆடை அணிவகுப்பு நடத்தும் விதம் எல்லாம் கூட... நாகரீகத்தின் வளர்ச்சியா? **வயது வந்தவர்கள்** என்று ஒரு மரியாதை இருக்கிறது. அந்த மரியாதையை கௌரவப்படுத்திக் கொள்ளாத ஒரு நாகரீகம் தமிழ் பெண்களுக்குத் தேவைதானா? இதைத் தான் நந்தினி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என நினைக்கின்றேன்.

24 மணிநேரமும் சாரி உடுப்பதென்பது சாத்தியமில்லாமல் போகலாம். சொல்லப்போனால்... ஈழத்தமிழ் பெண்களைப் பொறுத்தவரை இல்லையும்கூட. ஆனால் ...தெய்வதரிசன இடங்களில் கூட பெண்களைச் சாரியுடன் பார்க்க முடியவில்லையே! தலைமுடியை பின்னி விட்டுக்கொண்டோ அல்லது நவீன பாணியில் கொண்டை போட்டுக்கொண்டோவர மறுக்கிறார்களே! இதற்கெல்லாம் திரு. சி. கிருஷ்ணர் பாணியில் சொல்வதானால் ... நாகரீகம் அப்படித்தானே! அன்றைய காலத்து மூடப் பழக்க வழக்கங்கள், பெண் அடிமைத்தனத்தையெல்லாம் விட்டு உடனடியாக மீண்டு வருவதென்பது முடியாதது. அது தணிய பெண்கள் மட்டும் தனியாக போராட முடியாது. இருந்தாலும் பெண்கள் போராட்டத்தால் பலவிடயங்களில் அதிலிருந்து விடுபட்டு எவ்வளவோ முன்னேற்றமும் மாற்றங்களும் ஏற்பட்டு விட்டன.

ஆனால்... சற்று காட்டமாக இளம் விதவைகளின் மறுமணம் பற்றி பேசியே ஆகவேண்டும். ஒரு இளம் பெண் விதவையாக நிற்கும்போது ... **எந்தவொரு பெற்றோர் ஆவது என் மகனை உனக்கு திருமணம் செய்ய விரும்புகின்றோம். உனக்கு சம்மதமா?** என்று விதவைப் பெண்ணிடம் இதுவரை கேட்டிருக்கிறார்களா? **ஐயோ சின்னக் குழந்தையுடன் இவள் இவ்இளம் வயதில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எப்படி வாழ்வது?** எனச் சிந்தித்து மறுமணம் செய்து வைக்க யாராவது முயலுகிறார்களா? இல்லையே! அல்லது அந்த விதவைப் பெண் எல்லோரிடமும் வந்து **எனக்கு ஒரு வாழ்க்கை அமைத்துக்கொடுங்கள்** என கதறவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா? அப்படித்தான் அவள் கதறி அழுதாலும் இவர்கள் தம் ஆண்மகனை திருமணம் செய்து கொடுத்துவிடுவார்களா? இதற்கு மேலும் கடுமையா சொல்ல மனம் துடிக்கிறது. வேண்டாமே! நிறுத்துவோம்.

இந்த விதவை மறுமணம் என்பது பேசுவதற்கும், விவாதிப்பதற்கும், எழுதுவதற்கும், படிப்பதற்கும் அருமையான கருப்பொருளாக இருக்கும். ஆனால் எந்தவித பிரயோசனமும் இல்லை. விதிவிலக்காக இரண்டோ...நான்கோ...மறுமணங்கள் நடைபெற்றிருக்கலாம். விளம்பரங்களும் வந்திருக்கலாம். இதற்காக நடுவீதியில் பெண்கள் இறங்கி போராடவா முடியும்! **தானம்** என்றால் **பலி** என்றொரு அர்த்தம் இருக்கிறதா என்ன? இல்லையே! பின்பு ஏனன் இந்த **கன்னிகாதானத்தில்** ஒரு குழப்பம் அல்லது வெறுப்பு. இது இந்து சமய திருமண சடங்கில் நடைபெறும் ஒரு சம்பிரதாய நிகழ்வு. அவ்வளவு தான். **கன்னியாக இருக்கும் என்மகனை உனக்கு மட்டுமே இல்லறத் துணையாகத் தருகின்றேன்** என்று ஒரு தந்தை செய்வதில் என்ன தவறு இருக்கிறது. **கன்னி** என்ற **தகுதி** இல்லையென்றால் ... கல்யாணமே திண்டாட்டமாகிவிடுமே! **தானம்** என்னும்போது இல்லறம், சக்தி, உயர்நிலை ...என்ற நல்ல அர்த்தங்களாக எடுத்துக்கொள்ளலாமே!

எதுஎதையோப் பற்றியெல்லாம் பேசுகின்றோமே! இன்றுவரை **சீதனம்** என்ற பிரச்சனையைத் தீர்க்க முடிந்ததா என்ன? எவ்வளவு பாதிப்பு இன்றும் ஏற்படுகின்றது. கத்திக்...கத்தி ...எழுதி...எழுதி ஓய்ந்தாயிற்று. அவ்வளவு தான். பெண் விடுதலை பெற்றோமா? இதே போன்று பெண்கள் விடுதலை பெறாத எத்தனையோ விடயங்கள் உண்டு. பெண்களிடம் அறிவு, விழிப்புணர்வு இன்னமும் வேண்டும். மனப்பக்குவ வளம் வேண்டும். ஆடைப்போட்டியை விட்டு அறிவுப்போட்டிக்கு வரவேண்டும். இப்படி ...எத்தனை எத்தனையோ! ... என்னசெய்வது. நான் இங்கு சொன்னவையெல்லாம் விவாதத்திற்காக அல்ல. நடைமுறை யதார்த்தம்.

**-பிரியா இளங்கோவன்-**

---

## கருத்தாடற் களம்

**ஆசிரியர் அவர்கட்கு!**

முற்றம் 32வது இதழில் நான் எழுதிய **என்று தணியும் இந்த சுதந்திர தாகம்** என்னும் கட்டுரையைப்பற்றி முற்றம் 33வது இதழில் திரு.கனகராஜ் அவர்களும், திரு.சுழி.சி.கிருஸ்ணன் அவர்களும் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்திருந்தார்கள். முதலில் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இவர்களுடைய கருத்துக்களுக்கு பதில் எழுதி இதை ஒரு விவாதமாக்குவது அல்ல எனது நோக்கம்! இப்படியான எதிர்க்கருத்துக்கள், விமர்சனங்கள்தான், வாசகர்களுக்கு நல்ல தெளிவை ஏற்படுத்தும் என்பதால்த்தான் அவர்களுக்கு நான் கூறியிருக்கும் நன்றிகள்!

ஒரு கட்டுரையை எழுதுவதற்கு முன்னர் அதற்குத் தேவையான தரவுகளைத் தேடி எடுத்து, பின்னர் அதை பல கோணங்களிலும் ஆராய்ந்து தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்து, பின்னர் சாரம் உள்ளவற்றை மட்டுமே கட்டுரையாக்குகின்றோம். எப்படித்தான் மிகக் கவனமாக ஆராய்ந்து வரையப்பட்ட கட்டுரைகளானாலும் அவை எல்லோருக்கும் ஏற்றதாக அமைந்து விடுவதில்லை!

திரு.கனகராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல இது மிகவும் கனமான விடயம்தான்! அதை வாசகர்களுக்கு இலகுவாக புரியும்படி எழுதியதால் சிலவேளைகளில் அதன் கனம் குறைந்திருக்கலாம்! இவர் குறிப்பிட்டதைப்போல இவ்வளவு பக்கங்களுக்கள்த்தான் கட்டுரை அமையவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் ஆசிரியர் விதித்திருக்கவில்லை. ஆனால் நானாகவே பத்திகையின் பக்கங்களுக்கு ஏற்றவாறு எனது கட்டுரையை மட்டுப்படுத்திக்கொண்டேன்.

திரு. சுழி .சி கிருஸ்ணன் அவர்கள் எனது கட்டுரையில் சிரமப்பட்டு பல குற்றங்களைக் காண முயன்றிருக்கின்றார் என்றே தோன்றின்றது! காரணம் நான் ஏற்றுக்கொண்டிருக்கும் சில கருத்துக்களில் கூட இவர் குற்றம் கண்டிருக்கின்றார்! **ஐரோப்பிய நாடுகளில் வேலைக்குப் போகின்ற பெண்கள் டெனிம் அணிவதும், சிலுப்பா வெட்டுவதும் தவிர்க்கமுடியாததே! ஆனால் சில வயதான தாய்மார்களும் இதற்குள் அடக்கம்** இதுபோல இன்னும் நான் குறிப்பிட்ட சில கருத்துக்களையெல்லாம் இவர் இன்னும் கொஞ்சம் ஆழமாகப் படித்திருக்கலாம்! மேலும் கட்டுரையின் பின் பகுதியை இவர் படிக்கவில்லையோ என்னும் எண்ணமும் எனக்கு ஏற்படுகின்றது! காரணம் அவை பற்றிய எந்தவிதமான கருத்துக்களும் இவரின் விமர்சனத்தில் இடம்பெறவில்லை! அதே நேரத்தில் புறக்கணிக்க முடியாத சில கருத்துக்களையும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்!

பூச்சூடுவது பற்றி குறிப்பிடும்போது **திருமணமான பெண்கள் பூச்சுடாமல் இருப்பது அன்றைய தினத்தில் தான் ஊடலுக்குத் தயாராக இல்லை என்பதை கணவருக்கு குறிப்பால் சொல்லுகின்றார்** என்பததுபோன்ற நல்ல கருத்துக்களையும் வெளிப்படுதியிருந்தார்! இதற்காக அவரை பாராட்டுகின்றேன். இப்படியான கருத்துப் பரிமாற்றங்களும், விமர்சனங்களும் வைக்கப்படும்போதுதான் வாசகர்களுக்கு கட்டுரையின் ஆழமே புரியவருகின்றது.

மீண்டும் சொல்லுகின்றேன் இது கனகராஜ், கிருஸ்ணன், ஆகியோரின் கருத்துக்களுக்கு மறுப்புக் கருத்து அல்ல! இதுபோன்ற கருத்துக்கள் இன்னும் வரவேண்டும் என்பதற்காக இவர்களுக்கு நான் கூறிக்கொள்ளும் பாராட்டுக்கள். இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

நூறு மலர்கள் மலரட்டும்! நாளைய உலகம் சிறக்கட்டும்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநாயகன் தி.சாம்சன்



கலைஞர் திரு. திருச்செல்வம் சாம்சன் அவர்கள் எதிர்வரும் 01.11.09 அன்று பாரிசில் நடைபெறவுள்ள திருமறைக்கலாமன்றத்தின் **கலைவண்ணம்** நிகழ்வில் பாராட்டப்படவுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தி காதில் எட்டியது. அவர்பற்றிய தரவுகளை **முற்றம்** சஞ்சிகையில் பிரசுரிக்க வேண்டும் என்ற ஆவலினால் கலைமாமணி திரு.பெ.இம்மானுவல் அவர்கள் அவரைச் சந்தித்து உரையாடல் செய்திருந்தார். அந்த நேர்காணலில் அவர் கூறியவை கீழ் பதிவாகியுள்ளது.

**உங்கள் கலையுலக பிரவேசம் எப்படி அமைந்தது?**

எனக்கு இதுதான் கலை என்று தெரியாத பருவத்திலிருந்தே அது என்னில் ஊறியிருந்தது என எண்ணுகின்றேன். அது என் பிறப்போடு தொடங்கியது. அது என்இரத்தத்தோடு இணைந்துள்ளது. அதன் பிரவேசம்பற்றி எனக்கே தெரியவில்லை.

**உங்களது இளமைக் காலம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

நான் இலங்கையில் வாழ்ந்த காலத்தைவிட பிரான்சில் புலம் பெயர்ந்து வாழ்ந்த காலங்கள் அதிகம். இளமையில் பள்ளிக்கூடத்தில் படித்த நாட்களில் பேச்சுப்போட்டிகள், சிறு நாடகங்களில் நடிப்பதுண்டு. மற்றும் என் தந்தையாருடன் சேர்ந்து ஓர் இரு நாடகங்களில் நடித்துள்ளேன். அப்படியே எனது இளமைக் காலம் முடிந்தது.

**உங்களது அப்பா ஒரு சிறந்த நடிகன். அவருக்கு ஒப்பனை செய்யும் பாக்கியம் அந்நாட்களில் எனக்குக் கிடைத்தது. அவரைப்பற்றி இந்த நேரத்தில் என்ன சொல்ல விரும்புகிறீர்?**

நான் சிறுவனாக இருந்த காலத்தில் இருந்தே எனது தந்தையாரை ஒரு நடிகனாக, ஓவியனாக, சிற்பக் கலைஞனாக பார்க்கின்றேன். அந்த ஆர்வம் எனக்குள்ளும் சிறுவயதில் இருந்தது எனலாம். எந்தவொரு ஆசானிடமும் பயிலாமல் அக்கலைகளை என்னால் உள்வாங்க முடிந்தது. கிளிநொச்சியில் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் மேடையேற்றிய கடமையின் காவலன் என்ற நாடகத்தில் அவர் கும்பகர்ணனாக தோன்றி பேசிய வசனங்கள் இன்றும் என்நினைவில் இருந்து அகல முடியாதவை. அவருடைய குரல் வளம் பற்றி நீங்களே அறிவீர்கள். ஒலிவாங்கி இல்லாமலே அவருடைய குரல் கணீர் என்று இருக்கும். அவர் புகழ் விரும்பாதவராக இருந்தாலும் கிளிநொச்சியில் ஓவியர் திருச்செல்வம் என்றால் தெரியாதவர்கள் இல்லை எனலாம். மக்களுடைய பாராட்டுக்கள் அவருக்கு நிறையவே கிடைத்துள்ளது. நான் பல்குரலில் பேசுவதைக்கூட அவரிடத்தில் இருந்து தான் கற்றுக்கொண்டேன். அப்பாவின் அதிக சிறப்பு அவரின் ஓவியத்திலேயே இருந்தது. ஓவியர் பெனடிற் மாஸ்டரிடம் படித்து ஓவியத்தில் பல நுட்பங்களை தனதாக்கிக் கொண்டார். அவர் வேலைசெய்த விவசாயத் திணைக்களம் அவரின் ஓவியத்தைக் கண்டு விவசாயத்திணைக்கள ஓவியராக நியமித்தது. 1979ம் ஆண்டு ஏறக்குறைய 2000 படங்களை விவசாயத்துறைக்காக வரைந்து கொடுத்துள்ளார்.

**இலங்கையில் உங்கள் கலை வாழ்வை நினைவுகூர முடியுமா?**

இலங்கையில் எனது தந்தையாரின் தயாரிப்பில் மேடையேறிய சில நாடகங்களில் சிறிய பாத்திரங்களில் நடித்துள்ளேன். அதிகமாக சரித்திர நாடகங்களும், இலக்கிய நாடகங்களுமே அவர் மேடையேற்றியுள்ளார். கடமையின் காவலன்ஷி என்ற நாடகத்தில் நான் **இராமர்** வேடம் தரித்தேன். அந்த வேடம் எனக்கு அன்று நன்றாக அமைந்தது. அத்துடன் பல இடங்களில் எனது பல் குரல் நிகழ்ச்சிகளையும் பல மேடைகளில் நடாத்தியுள்ளேன். இலங்கையில் நான் இருக்கும்பொழுது என்நினைவுக்கெட்டியவரை நான் கலந்துகொண்ட மேடை நிகழ்வுகள் இவைகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புகலிடச்சூழலில் உங்கள் கலைப்பிரவேசம் எப்படி அமைந்தது?**



நான் கிளிநொச்சியில் வாழ்ந்த காலத்தில் இருந்தே திரு.பிரியாலயம் துரைஸ் அவர்களை நன்றாக அறிவேன். அங்கு அவருடன் பல கலை நிகழ்ச்சிகளில் இணைந்துள்ளேன். பிரான்ஸ் வந்த பின்பு அவருடன் தொடர்பு இருந்தது. 1983ம் ஆண்டு திரு.ஞானம் பீரிஸ் அவர்கள் **தனிப்புறா** என்ற வீடியோ படத்தை தயாரித்தார். பிரியாலயம் துரைஸ் அவருக்கு பல உதவிகளைப் புரிந்து ஊக்கம்கொடுத்தார். துரைஸ் என்னை ஞானம் பீரிஸ் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி என்னையும் நடிக்க வைத்தார். அதன்பின் பிரியாலயம் துரைஸ் அவர்கள் **நீதியின் சோதனை** என்ற படத்தை எடுத்தார். அதில் கதாநாயகனாக என்னை அவர் நடிக்கவைத்தார். இந்த இரண்டு படிங்களிலும் நீங்களும் என்னுடன் இணைந்து நடித்துள்ளீர்கள். இவைதான் புகலிடச்சூழலில் எனது கலைப்பிரவேசம்.

எனக்குள் இருக்கும் கலை உணர்வுகளை உலகிற்குக் காட்டும் விதமாக, என்னைப் புரிந்துகொண்டு என்னை முழுதாகப் பயன்படுத்தி, எனக்குள் இருந்ததை எனக்கே அறிமுகப்படுத்திய கவிஞர், கலைஞர் அருந்ததி அவர்களை புகலிடச்சூழலில் என்னால் மறக்கமுடியாது. அவர் இயக்கிய நாடகங்களான **பரிநாமம், கருதுகோள், வியாபகம், இன்னொரு மனிதன், மீண்டும் பாரதி** போன்ற நாடகங்களிலெல்லாம் என்னை நடிக்க வைத்து எனக்குள் கலை உணர்வை இவ்வுலகிற்கு காட்டியவர் அவர்தான். அவர் இயக்கி **முகம்** திரைப்படம் தமிழர்கள் வாழும் இடங்களிளெல்லாம் பெரிதாகப் பேசப்பட்டது.



**ஓவியர், நடிகர், பல்குரலாளர் என பல முகங்களை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு பிடித்த முகம் எது? ஏன்?**

ஒரு ஓவியன் எந்த நிறங்களையும் ஒதுக்கி வைப்பது கிடையாது. அவனுக்கு எல்லா நிறங்களுமே அவனது மன நிறைவுக்கு ஏற்ப அமையும் பொழுது அதை இரசிக்கின்றான். பேருவகையடைகின்றான். எந்த நிறத்தையும் ஒதுக்கமாட்டான். அதேபோல் கலைக்குள் அடங்கிய எல்லாமுகங்களையும் ஆத்ம திருப்தியுடன் உள்வாங்கிக் கொள்கிறேன். மனமகிழ்வுடன் இரசிக்கின்றேன்.

**உங்கள் கலை வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வு எது?**

இதுவரை எதுவும் இன்னும் நிகழவில்லை. நிகழவேண்டுமாயின் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த மகா கலைஞனாகிய எம்பெருமான் இறைவனை என் ஜீவகாலத்துக்குள் கண்டடைவதே.



**உங்கள் குடும்பம் ஒரு கலைக்குடும்பம் என்பது எனக்குத் தெரியும். அந்தக் குடும்பத்தைப் பற்றி நீங்களும் சில வரிகள் சொல்லுங்களேன்?**

எனது அப்பாவின் ஆற்றல் எனக்குள் எப்படிப் பிரவேசித்ததோ அதேபோல் எனது மனைவியும் எனக்கு கலையாகக் கிடைத்தாள். அதேபோல் எங்கள் பிள்ளைகள் மீதும் கலைஉணர்வு ஏற்பட்டு பரதநாட்டியம், பாட்டு, நடிப்பு எனப் பல கலைமுயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களிலும் குறிப்பாக எனது மூத்த புதல்வியில் எனது கலையுணர்வுகள் அப்படியே ஊறியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைவாழ்வு உங்களுக்கு திருப்தியைக் கொடுத்திருக்கிறதா?**

கலைவாழ்வு எனக்குப் புகழை நிறையவே ஈட்டித்தந்திருக்கிறது. இதை எனது 50வயதுக்கு முந்திய என்மனம் மிகவும் சந்தோஷப்பட்டது. ஆனால் அதை நான் இப்போது எண்ணும்பொழுது அது வெறும் புகழோடு நின்று விட்டதே என்று என்மனம் ஏங்குகின்றது. அந்தக் கலை மூலமாக மக்களுக்கு எதைச் சொன்னேன், என்னத்தைச் செய்தேன் என்ற கேள்வி எனது மனதில் தோன்றும்பொழுது சரியான விடை எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. எல்லாப்புகழும் மாயமாகத் தோன்றுகிறது.

**பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தால் இன்று பாராட்டுப்பெறும் நீங்கள் கலைஉலகிற்கு சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

திருமறைக்கலாமன்றம் எனக்குப் பாராட்டுவிழாச் செய்கிறார்கள். அதை அவர்கள் மனத்திருப்திக்குச் செய்கிறார்கள். நான் மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன். திருமறைக்கலாமன்றம் எனது கலைஉணர்வுகளையும், திறமைகளையும் பயன்படுத்தி புகலிடத்தில் வாழும் என்னை உலகறியச் செய்துள்ளது. 1993ம் ஆண்டு திருமறைக்கலாமன்றம் மேடையேற்றிய **பலிக்களம்** என்ற இயேசுவின் திருப்பாடுகளை சித்தரிக்கும் நாடகத்தில் நான் **தலைவன்** பாத்திரம் ஏற்று நடித்திருந்தேன். அந்த நாடகத்திற்கான மேடையமைப்பு வேலைகளையும் நானே பொறுப்பேற்றுச் செய்திருந்தேன். எனது நடிப்பை பலரும் பாராட்டிப் பேசியதுடன், அந்த நாடகத்தில் போடப்பட்ட மேடைஅமைப்பு அனைவரையும் சிறப்பாகக் கவர்ந்திருந்தது. புகலிடக் கலைஞர்களின் நாடக அரங்கில் அது ஓரு மைல்கல். அதனைத் தொடர்ந்து மன்றம் மேடையேற்றிய **களங்கம், குருதி கழுவிய குவலயம்** நாடகங்களிலும் நடித்துள்ளேன். அவை எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தவையாகும். ஈழத்தமிழர்களின் புகலிடமான பிரான்ஸ் மண்ணில் தமிழ் கலைகளை நேர்த்தியுடன் நேசித்து, ஆர்வத்துடன் அரங்கேற்றி வருபவர்கள் திருமறைக்கலாமன்றத்தினர் தான் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

மனிதனுக்குள் இருக்கும் கலை முளைவிடவேண்டும். ஒரு நெல்லின் மணி மண்ணில் விதைக்கப்படும் போது அது முளைவிடுகிறது. அது தன்னை அழித்து தான் முளைவிடுகின்றது. நாம் எம்மை அர்ப்பணிக்காமல் முளைவிடுவதைப் பற்றி பேசியவர்களாய் இருந்தோம். அப்படியாயின் எப்போது முளைவிடுவது? எப்போது பயன் கொடுப்பது? அதைப் பற்றியே சிந்திக்கின்றேன். அதையே உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

---

## சாத்தான்களின் உலகம்

துவாரகன்

மனிதர்களைப் போலவே
வருகின்ற துன்பங்களுக்கும்
கொஞ்சமும் இரக்கமில்லை

எப்படித் தான்
எல்லாத்துயரங்களும்
ஒன்றாய்த் திரண்டு விடுகின்றன?

சுடுகாட்டில் அடக்கம் செய்ய
ஆயத்தமாகிய பிணத்தின் முன்
கொள்ளிக்குடம் சுற்றிக்கொள்ளும் உணர்வுடனே
எங்களின் காலங்கள் கழிந்து கொள்கின்றன.
இத்துயரங்களைப் போலவே
அதை வருவித்துக் கொள்ளும் மனிதர்களுக்கும் கூட
கொஞ்சமும் இரக்கமில்லை

வீதியில் வாகனத்தின் சில்லுகளிடையே
நசிந்து செத்துப் போன
ஒரு குட்டி நாயின் வாழ்வு போல
நாம் வாழும் காலங்களும் செத்துப்போகின்றன.

யாரிடம் சொல்லி ஆற்றுவது
யார் யாரைத் தேற்றுவது
கொல்லும் வீரியத்தோடு
கோரப்பற்களைக் காட்டியபடி
மரணம் முன்னால் வந்து
எக்காளமிட்டுக் கொக்கரிக்கிறது.

மரணத்தின் கூரிய நகங்கள்
எம் தொண்டைக் குழியில் ஆழ இறங்குகின்றன
அதன் கடைவாய் வழியாகவும்
நாக்குகளின் மீதாகவும்
இரத்த நெடி வீசியபடியே உள்ளது.

எங்கும் மரண ஓலம்
எங்கும் சாவின் எச்சம்
எங்கள் வாழ்வுக்காக
இன்னமும் வாழும் ஆசையுடன்
அம்மணமாய் நின்று உயிர்ப்பிச்சை கேட்கின்றோம்.

கைநீட்டி அழைக்கும் கரங்களுக்கு நடுவிலும்
குறிபார்த்தபடி குறுவாள் ஒளிர்ந்திருக்கிறது.

இது சாத்தான்களின் உலகம் என்பதால்
கடவுள்களுக்குக் கூட
வேலையில்லாமற் போய்விட்டது.

• • • • •

### ஆசிரியர் குழு

திரு. டேமியன் சூரி
திரு. வண்ணைதெய்வம்
திரு. இசிதோர் பெர்ணாண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்தி !!!!!!!!

**வண்ணை தெய்வம்**

அடர்ந்த காடு ஒன்றில் எப்படியோ பனை மரம் ஒன்று தனியாக வளர்ந்து நின்றது. ஏனைய மரங்கள் அனைத்தும் தனித்து நில்லாமல் அவைகளின் இனத்தைச் சேர்ந்த மரங்களோடு அக்கம் பக்கத்தில் துணையாக நிற்க தான் மட்டும் தனியாக நிற்பது பனைமரத்திற்கு வேதனையாக இருந்தது.

அந்தப் பனை மரத்திற்குக் கீழே பச்சைப் பசேலென மிக அடர்த்தியாக புற்கள் முளைத்திருந்தன. அந்த வழியாக வந்த முயல்க்குட்டி ஒன்றிற்கு அந்தச் சூழ்நிலை மிகவும் பிடித்திருந்ததால் அங்கேயே அங்கும் இங்கும் திரிந்து அங்குள்ள புற்களை வயிறு நிறைய உண்டவுடன் அதற்கு தூக்கம் வந்தது. எனவே அந்தப் புற்களுக்கு மேலேயே படுத்துத் தூங்கிவிட்டது.

தூங்கிய முயல் உலகம் அழிந்து எல்லா உயிரினங்களும் பூமிக்குள் புதைந்து போவதைப்போல கனவு கண்டு கொண்டிருந்தது. அந்த நேரத்தில் பனை மரத்தில் இருந்து பனம்பழம் ஒன்று விழுந்து மூன்றாகப் பிரிந்து சிதறியது. அது தொப்பென்று விழுந்த பேரொலியில் திடுக்கிட்டு விழித்தெழுந்த முயல் பனங்காய் மூன்று துண்டுகளாக இருந்ததைக் கண்டு தான் கண்ட கனவிற்கும் அதற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக கற்பனை செய்து **ஐயோ உலகம் அழிகின்றது! உலகம் துண்டு துண்டாக உடைந்து கொண்டிருக்கின்றது!!** என்று பலத்த சத்ததுடன் கத்தியபடி நாலுகால்ப் பாச்சலில் தாவி ஓடியது.

முயல் கத்தியபடி ஓட காட்டில் வாழ்கின்ற அதன் இனத்தவர்களும் ஏனைய காட்டு மிருகங்களும் புதர்களுக்குள் இருந்து வெளியே வந்து குட்டி முயலிடம் காரணம் கேட்க **உலகம் உடைந்து கொண்டிருக்கின்றது இன்னும் சில நேரங்களில் நாங்களெல்லாம் இந்த மண்ணுக்குள் புதையப்போகின்றோம் அதற்குள் எல்லோரும் இந்தக் காட்டைவிட்டு ஒடுங்கள்** என்று கத்தியபடி ஒட ஏனைய மிருகங்களும் குட்டி முயலுக்குப் பின்னாலேயே ஓடத் தொடங்கின.

இப்படியாக காட்டில் உள்ள நரி, கரடி, ஓநாய், மான், மரை, என காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் ஓடிவருவதைக் கண்ட யானை, புலி, போன்ற பலம் பொருந்திய மிருகங்கள்கூட அவைகளோடு சேர்ந்து ஓடத்தொடங்கின.

ஓடிக்கொண்டிருந்த ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு விதமாகக் கத்திக்கொண்டே ஓடின!

ஐயோ உலகம் உடைந்துவிட்டது!
ஐயோ உலகம் பிளந்துவிட்டது!
ஐயோ உலகம் சுக்கலாகிக்கொண்டே இருக்கின்றது!
ஐயோ உலகம் அழிந்து கொண்டிருக்கின்றது!

இப்படியாக ஒவ்வொரு மிருகமும் கொஞ்சம் கொஞ்சமாக மிகைப்படுத்தியபடியே கத்தியபடி ஓடிக்கொண்டிருந்தன!. இதையெல்லாம் கேட்டுக்கொண்டு தனது குகையை விட்டு வெளியே வந்த சிங்கம் மிருகங்களைப் பார்த்து **நில்லுங்கள்** என உத்தரவிட்டது. மிருகங்களெல்லாம் சிங்கத்தின் கட்டளையை மீறமுடியாமல் பயத்துடன் அப்படியே நின்றன!. சிங்கம் ஏனைய மிருகங்களைப் பார்த்து **ஏன் இப்படிக் காட்டுக் கூச்சல் போடுகின்றீர்கள்? அப்படி என்ன நடந்தது?** என்று அதட்டலாகக் கேட்டது.

கூட்டத்தில் ஒரு மிருகம் **அரசே உலகம் அழிந்து கொண்டிருக்கின்றது! நாங்களெல்லாம் பூமிக்குள் புதையுண்டு சாகப்போகின்றோம்!** என்று அழுதபடியே கூறியது.

**என்னது? உலகம் அழிந்து கொண்டிருக்கின்றதா? நாமெல்லோரும் சாகப் போகின்றோமா?** என்று கோபத்துடனும், ஆச்சரியத்துடனும் கேட்டது. **ஆமாம் அரசே!** என எல்லா மிருகங்களும் கோரஸ்சாக குரல் கொடுத்தன.

உடனே சிங்கம் அவர்களுக்கு முன்பாக வந்து தன் பலம் கொண்ட மட்டும் பூமியை தனது காலினால் ஓங்கி உதைத்தது! பின்னர் துள்ளிக் குதித்தது! பூமி அப்படியே இருந்தது! பின்னர் கூறியது **இப்பொழுது நான் செய்தது போலவே நீங்களும் உங்கள் பலம் கொண்ட மட்டும் பூமியை மிதியுங்கள் என்றது.** அனைத்து மிருகங்களும் அப்படியே செய்தன. பூமி அப்படியே இருந்தது.

சிங்கம் கோபத்தை அடக்கியபடி **என்ன பூமி உடைகின்றதா? உடைவதற்கான சாத்தியக் கூறுகளாவது தெரிகின்றதா?** எனக்கேட்டது. மிருகங்களெல்லாம் அவமானத்துடன் **இல்லை** எனக்கூறி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டன!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஏன் அவ்வாறு கத்திக்கொண்டு வந்தீர்கள்? எனக் கேட்டது சிங்கம்.

உலகம் அழியப்போகின்றது என சிறுத்தை தான் எனக்குக் கூறியது என்றது புலி! புலிதான் எனக்குக் கூறியது என்றது யானை! நரிதான் எனக்குக் கூறியது என்றது ஓநாய்!. இப்படியாக ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு மிருகங்களின் பெயர்களைக் கூறிக்கொண்டு போக கடைசியாக முயல் குட்டியின் பெயர் வந்தது.

குட்டி முயலே இவ்வளவு கலவரத்திற்கும் நீதான் காரணமா? நீ எங்கிருந்து இதைத் தெரிந்து கொண்டாய்? என்று அதட்டலாகக் கேட்டது சிங்கம்.

முயல், தான் பனைமரத்தடியில் நித்திரை கொண்டு உலகம் அழிவது போல கனவு கண்டதையும் அந்த நேரத்தில் பனம் பழம் விழுந்து சிதறியபோது உலகம்தான் உடைகின்றது என தான் நினைத்ததாகவும், அதனாலேயே அப்படிக் கத்திக் கொண்டு ஓடி வந்ததாகவும் அழுதபடியே கூறியது.

ஒரு குட்டி முயலின் அறியாத்தனமான பேச்சு பெரும் வதந்தியாக மாறி தாங்கள் அனைவரும் முட்டாள்களாகிப் போனதை எண்ணி மிருகங்களெல்லாம் வெட்கப்பட்டுக்கொண்டன.

சிங்கம் கம்பீரமாக் கூறியது **முட்டாள்கள் வாழும் ஊரில் குட்டி முயல்கூட கெட்டிக்காரன்தான்!** நீதி! நம்புவர்கள் இருக்கும்வரை வதந்திகளும் உண்மையாகும்!

---

**சக்கடத்தார் சொல்கின்றார்**

**சும்மா சிரிப்பதற்கு மட்டும்!**

0 மேற்படிப்பு படிக்காதவர்களை ஏன் மேற்படியான் என்று சொல்லக்கூடாது?

0 மூவேந்தர்கள் என்றால் மூன்று வேந்தர்கள். மூதேவி என்றால் மூன்று தேவிகளா?

0 அனுமானின் வாலில் ராவணன் தீ வைத்தான். அதனால் அனுமான் அழித்தது ராவணனின் **தீவைத்தான்.**

0 மு.கருணாநிதி மு.க என்று ஒப்பமிடுவார். ஆனால் பா.விஜய் பா.வி என்று ஒப்பமிடலாமா?

0 சாரதிகளே நீங்கள் சாலையைப் பார்த்து ஓட்டினால் சமத்து! சேலையைப் பார்த்து ஓட்டினால் விபத்து!

---

# மறதி!

நேற்று மனைவியோடு சின்னச் சண்டை
ராத்திரி தனியாகவே படுத்துக்கொண்டாள்
இன்று சம்பளத்தோடு வந்தேன் -அவள்
நேற்றைய சண்டையை மறந்துவிட்டாள்.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறாமைக்காக
என்னிடம் அடி வாங்கிய மகனின் கோபம்
நான் கொடுத்த சாக்கிலேட்டில் மறந்துபோனது.

சிறிய மனஸ்தாபத்திற்காக
பெரிதாகக் கோபித்துக்கொண்ட நண்பன்
இன்று கடன் கேட்டு வந்தபோது
அன்றைய மனஸ்தாபத்தை மறந்துபோனான்.

நானும் சிலவேளைகளில் அப்படித்தான்
ஆசையாக... அவசரமாக...
மகனோ, மனைவியோ கேட்ட பொருளை
பணமில்லாத சமயங்களில்
நானும் மறந்துபோவதுண்டு.

வண்ணை

---

# சுதந்திரம்

உறையும் பனிக்குளீர்
என்னையும்
உறைய வைக்கிறது.

வாழ்க்கைக் கதவுகள்
அனைத்தும் அடைபட
முட்டி முட்டி மோதும்
சிறைச் சுவர்களிடை

சொல்ல முடியாது
சொன்னால்
உயிர்போகும்.
மெல்ல முடியாது
மென்றால்
தலைபோகும்.

சொல்லவும்
மெல்லவும்
முடியாமல்
மணலில் தலை புதைத்த
தீக்கோழி போல்.

சூழ இடமெல்லாம் தீ!
காணும் இடமெல்லாம்
கரும்புகை.

நீலவானம்
தன் நிறம் மறந்து
வக்கிர மழை பொழிகிறது
உக்கிரத் தாண்டவமாடி.

இ. ஜீவகாருண்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்களில் மாவிலை தோரணங்கள் வாழைமரம் கட்டுவது ஏன்?

விழாக்கள் நடைபெறும் இடங்களில் வாழைமரம், மற்றும் மாவிலை, தோரணங்கள் கட்டுவது தமிழர்களின் கலாச்சாரத்தில் பாரம்பரியமாக இடம்பெற்றுவரும் ஒரு நடைமுறை. ஆனால் இவைகள் ஏன் கட்டப்படுகின்றது? என்பதனை நம்மில் பலரும் தெரிந்திருக்கவில்லை.

சிலர் சொல்லுவார்கள் அழகாக இருப்பதற்காகவும், மிக எளிதாக விழா நடைபெறும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்காகவும் என்று. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அதுதான் பிரதானமான காரணம் அல்ல.

விழா நடைபெறுகின்ற மைதானத்தில் அல்லது மண்டபத்தில் அதிகமான மக்கள் கூடும்போது அவர்கள் எல்லோரும் சுவாசிக்கின்றார்கள். இதன் காரணமாக உயிர்வாயு அதாவது ஒக்சிசன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் வயதானவர்களும் நோயாளிகளும் மயக்கமடையக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. ஏனையவர்களுக்கும் களைப்பு அல்லது மூச்சுத்திணறல் ஏற்படலாம். இதனை முற்காலத்து முனிவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். இதனால் தான் விழாக்கள் நடைபெறும் இடங்களில் வாழைமரங்கள் கட்டியும் மாவிலை, தோரணங்களைத் தொங்கவிட்டும் அலங்கரித்தார்கள்.

வாழை, கமுகு, மாவிலை, தோரணங்களில் ஏனைய தாவரங்களைவிட அதிகமான நீர்ச்சத்து இருக்கின்றது. அதுமட்டுமல்ல அவை தாய்மரத்தில் இருந்து வெட்டி எடுத்தாலும் வாடும்வரை நீர்ச்சத்தை தம்மிடம் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றது. இதனால் கூட்டத்தில் உள்ளவர்கள் வெளிவிடும் கரியமில வாயுவை தாம் பெற்றுக்கொண்டு தம்மிடமுள்ள ஒக்சிசனை வெளியே விடுகின்றன. இதனால் அந்த இடத்தில் உள்ள காற்று சுத்தமடைகின்றது! அத்துடன் இவற்றில் உள்ள நீர்ச்சத்து நீராவியாகி காற்றுடன் கலப்பதனால் காற்றில் உள்ள நீராவிச் செறிவைக் கூட்டி அந்த இடத்தில் ஏற்படும் சன வெட்கையை தணிப்பதற்கும் ஏதுவாக இருக்கின்றது. இதனால் அங்கு உள்ளவர்கள் எந்தவித பாதிப்புமின்றி நிகழ்வில் மகிழ்வுடன் கலந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

நமது முன்னோர்களின் நுண்மதியை நாம் எப்படிப் பாராட்டுவது!?

எங்கோ படித்தது!

**நந்தினி**

---

# நம் தமிழை நாம் அறிவோம்!

***பெயர் வந்த காரணங்கள்***

**பூவரசு**

பூவரசு தாவர இனத்தில் ஒரு மரம். இந்தப் பெயருக்குள் ஒரு அருமையான தத்துவம் புதைந்திருக்கின்றது. பூக்களைப் பொதுவாக நிலப்பூ, நீர்ப்பூ எனப் பிரித்துச் சொல்வார்கள் ஆய்வாளர்கள். நிலப்பூக்களை கொடிப்பூ, செடிப்பூ, எனப்பகுப்பார்கள். கிளை உயர்ந்த மரங்களில் பூக்கும் பூக்களில் பூவரசம்பூ மட்டும்தான் மிகப் பெரிய பூவாகும். அதனாலேயே முன்னோர்கள் பூக்களின் அரசு பூவரசு என்று சொல்லிவைத்தார்கள். ஏனைய கிளை உயர்ந்த மரங்களாகிய ஆல், அத்தி, வேம்பு, புளி, போன்ற மரங்களின் பூக்களெல்லாம் மிகச் சிறிய பூக்களே.

**வெற்றிலை**

வெற்றிலை இது கொடிவகையைச் சார்ந்த ஒன்று. இக்கொடி பூப்பதும் இல்லை. காய்ப்பதும் இல்லை. வெறுமனையே இலைகளை மட்டுமே தளிர்ப்பதாகும். இதனை வெறுமை இலைச் செடி எனக்கூறியவர்கள் பின்னர் வெற்றிலை எனச் சொல்லி வைத்தார்கள் எமது முன்னோர்கள்.

உண்ட உணவு ஒழுங்காகச் செமிப்பதற்கு உதவுவது வெற்றிலைச்சாறு. வெற்றிலைச்சாறு உடலுக்குள் போகவேண்டும். அவ் வெற்றிலையின் எரிப்பு உணர்வை மந்தப்படுத்த துவர்ப்பு உணவாகிய பாக்கு தேவைப்படுகின்றது. வெற்றிலை பாக்கோடு சுண்ணாம்புச் சத்தும் உடலுக்கு தேவைப்படுகின்றது. ஆதலாலேயே வெற்றிலையோடு பாக்கு சுண்ணாம்பையும் சேர்த்துக்கொள்கின்றார்கள்.

எங்கோ படித்தது

**நந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை

என். வரதராஜன்

எம்மில் பலர் மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்துப் பொறாமைப்படுவதுண்டு. அவன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறான். அவன் கொடுத்து வைத்தவன். அவனுக்கு எந்த நோய்நொடியும் இல்லை இப்படிப் பல. ஆனாலும் அவரவர்களின் இடத்தில் நாம் இருந்தால்தான் அவர்களின் கஷ்டம் எங்களுக்கும் புரியும்.

உலகில் ஆரம்பத்தில் பொருள்கள்தான் பண்டைமாற்று முறையில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. உலகின் வளர்ச்சியில் நாகரிகம் வளர பணம் என்பது வந்து சேர்ந்தது. ஆரம்பத்தில் பணம் சம்பாதித்தல் என்பது அவசியம் எனக் கருதப்பட்டது. நாளாக நாளாக அது மனிதரின் பழக்கமாகிவிட்டது. இப்பொழுது அது ஒரு நோய்.

ஒரு நாள் பட்டினத்தார் வெகு தொலைவில் இருந்த கோயில் ஒன்றிற்கு சென்றுகொண்டிருந்தார். போகும் வழியில் ஒரு வீட்டின் முன் பலர் கூடி நின்று அழுது கொண்டிருந்தார்கள். அதனைப் பார்த்த பட்டினத்தார் அவர்கள் அழும் காரணத்தை அங்கிருந்த ஒருவரிடம் கேட்டார். அந்த வீட்டில் ஒருவர் இறந்துபோயிருந்தார். அழுகிறவர்களைப் பார்த்த பட்டினத்தார் தானும் 'ஓ' வென்று கதறி அழுதார். பட்டினத்தாரைப் பார்த்த அங்கிருந்தவர்கள், இறந்தவரின் நண்பராக இருக்கலாம் எனக் கருதி அவரைச் சமாதானப் படுத்த முயற்சித்தார்கள். அவரோ அழுகையை நிறுத்துவதாக இல்லை. ஒவ்வொருவராக அவரிடம் பேச்சுக் கொடுத்தார்கள். 'இறந்தவர் உங்கள் நண்பரா?' என்றார்கள். 'இல்லை' என்றார். 'உறவினரா?'என்றார்கள். அதற்கும் 'இல்லை' என்றார். 'உமக்குத் தெரிந்தவரா?' என்றனர். 'எனக்கு அவரைத் தெரியவே தெரியாது' என்றார். அப்போ ஏன் தெரியாத ஒருவருக்காக வேதனையுடன் அழுகிறீர்கள் என்றனர். அதற்கு பட்டினத்தார், இறந்துபோன அவருக்காக அழவில்லை... அவனுக்காக அழுகிற உங்களைப் பார்த்துத்தான் அழுகிறேன் என்றார். ஏனெனில் நாம்கூட ஒவ்வெரு நாளும் செத்துக்கொண்டிருக்கிறோம். என்றோ ஒருநாள் இவ்வுலகை விட்டு முழுதாகப் போய்விடுவோம். ஆனபடியால் அழுது புலம்புவது அறிவுடமையா? என்றார்.

பணம் என்பது காலில் அணிகின்ற சப்பாத்துப் போன்றது. அளவு சிறிதாயின் காலினைத் நெருக்கித் துன்பமடையச் செய்யும். அளவு பெரிதானால் நடப்பது கடினமாயிருக்கும். அதேபோன்றதுதான் பணமும். குறைந்தால் கையைக் கடிக்கும். கூடினால் ஆளின் நடையைக் கெடுக்கும். தமக்குத் தேவையான பணத்தின் அளவை அவரவர்தான் முடிவுசெய்ய வேண்டும்.

இந்தப் பரந்த உலகில் நாம் எப்படியும் வாழலாம் என்பது தவறு. அப்படி வாழ்வது என்பது விலங்குகளுக்கு உரிய வாழ்க்கை. நாம் மனிதர்கள். பகுத்தறிவை உடையவர்கள். எது சரி, எது தவறு என்பது எமக்குப் புரியும். எமது தனிமனித செயலினால் சமுதாயமே பாதிப்படையும். இன்று ஐரோப்பாவில் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. காரணம், புகைப்பவரைவிட அருகில் இருப்பவர்தான் அந்தப் புகையினால் அதிகம் பாதிக்கப்படுகின்றார். இதனால்தான் ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தின் பாதிப்புக்கு காரணமாகின்றான். சிலரிடம் சில நிமிடங்கள் கதைத்தாலே போதும். தங்களைப்பற்றி புகழ்ந்து தள்ளுவார்கள். இவர்களின் மமதையினால் கேட்பவர்கள் சிலவேளைகளில் பாதிப்படையலாம்.

வாழ்க்கையின் வெற்றி தோல்விகள் அதிஷ்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுவதில்லை. பெரிய கதவினைத் திறக்கும் சாவி சிறியதாக இருப்பதைப் போன்று, தற்போதுள்ள உங்கள் நிலை என்ன? நான் எப்படி முன்னேறலாம் என்ற கேள்வியை நீங்களே கேட்டுப் பார்த்தால், நீங்கள் முன்னேறுவதற்கான வழி தானாகப் பிறந்துவிடும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம்லிங்கன் தனது 21வது வயதில் வியாபாரம் செய்யத் தொடங்கினார். அதிலே பெருத்த நஷ்டம். பின் மாகாணசபைத் தேர்தலிலே போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்தார். அதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். அதிலும் தோல்வி. தனது 47வது வயதில் துணை ஜனாதிபதிக்குப் போட்டியிட்டு தோல்வி. அப்போது மனம் தளரவில்லை. தனது 52வது வயதில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்தார்.

அவர் ஒவ்வொரு தடவையும் தோல்விகளைச் சந்தித்தபோது பலரும் அவரை பரிகசித்தார்கள். அவர் அதனைப் பொருட்படுத்தாமல் தனது நம்பிக்கையில் செயல்பட்டபடியினால் உலகம் பாராட்டும் ஒருவரானார்.

மனிதன் நன்னெறிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்று உலகின் எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றன. இதற்குக் காரணம் என்ன? இருப்பினும் இன்றைய உலகில் மேலைத்தேய நாடுகளைவிட கீழைத்தேய நாடுகளில் வாழ்பவர்கள்தான் சுயநலம் மிக்கவர்களாகவும் சோம்பேறிகளாகவும் உழைக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களால் சேர்ந்து வாழ முடிவதில்லை. ஒருவரை ஒருவர் நேசிப்பதில்லை. ஒருவருக்கொருவர் சண்டையிடாமலும் பொறாமைப்படாமலும் மூன்று பேர்கள் சேர்ந்து வாழ முடிவதில்லை. உழைப்பு துன்பத்தைத் தரும். ஆனால் அந்தத் துன்பத்திற்குக் காரணம் பற்று. நம்முடைய சக்தியில் பெருமளவை எப்படி மிகவும் இலாபகரமாகப் பயன்படுத்துவது என்பதுபற்றி மதங்களின் கர்மயோகம் என்ற பகுதி விளக்குகிறது. நாம் யாருக்காவது உதவி செய்ய விரும்பவேண்டும். நாம் உதவி செய்தவர் நன்றி கொன்றவராகி, நமக்குப் பகைவராகி விடுவது துன்பத்தைத் தரும் செயல்தான். நாம் உதவுவதற்குப்பதிலாக எம்மைப்பற்றிப் பெருமைபேசி அயலவர்களின் நிலையைப் புரியாமல் கதைப்பது நல்லதல்ல.

உயர்ந்த மனோபாவம் உடையவர்கள் தங்களின் பட்டங்கள், பதவிகள், தங்களுடைய வசதி வாய்புகள் போன்றவற்றை வெளிப்படுத்திக் காட்டமாட்டார்கள். அற்பமான மனிதர்கள் சிறிதும் கூச்சம் இன்றி தங்கள் பதவிகள், பணபலம், தங்களது அதிகாரங்கள் போன்றவற்றை அகங்காரத்தோடு வியந்து கூறிக்கொண்டிருப்பார்கள். பிறர் மனம் நோகக்கூடாது என்பதற்காக தன்னையே தியாகம் செய்தவர்களைத்தான் இன்று உலகம் போற்றுகிறது.

புத்தபெருமானின் வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்று. நீண்ட நாட்களாக ஒரு பரம ஏழை பகவான் புத்தரைத் தனது வீட்டிற்கு பிச்சை ஏற்க வரும்படி வற்புறுத்தினார். 'சரி, ஒருநாள் வருகிறேன் என்று ஒத்திப்போட்ட புத்தர், ஒரு நாள் திடீரென்று இன்று உனது வீட்டிற்கு வருகிறேன்' என்று சொல்லிவிட்டார். அன்று அந்த ஏழையின் வீட்டில் சமைக்க எதுவுமில்லை. கடன் வாங்கும் நிலையிலும் அந்த ஏழை இல்லை. இருப்பினும் மழைக்காலத்தில் விளைந்த காளான்களைப் பதப்படுத்தி வைத்திருந்த அந்த ஏழை, அவற்றைச் சமைத்து புத்தருக்கு இன்முகத்துடன் உணவிட்டான். புத்தபெருமான் உணவை வாயில் வைத்தபோது அது கசந்தது. அதற்குக் காரணம் அந்த இன காளான் நஞ்சாக மாறி இருந்தது. அது விஷம் எனத் தெரிந்தும் கொடுத்தவன் மனம் நோகக் கூடாது என்பதற்காகச் சாப்பிட்டார் புத்தர். வீட்டிலிருந்து வெளியே வந்த அவர் வாந்தி எடுத்தார். அப்போது பதற்றம் அடையாமல் புத்தர் 'உலகில் இவனே பெரிய பாக்கியவான். புத்தருக்கு இறுதி உணவைக் கொடுத்தவன். என அறிவியுங்கள்' என தனது சீடர்களுக்கு உத்தரவிட்டார். விஷயம் சீடர்கள் எல்லோருக்கும் புரிந்துவிட்டது. முதல் வாய் உண்டதுமே அதில் விஷம் இருக்கிறது எனக் கூறியிருக்கலாமே என சீடர்கள் புலம்பியபோது, நடக்கவேண்டியது நடந்திருக்கிறது. மரணம் ஒரு பெரிய விஷயமே அல்ல என்றார். அவனை விஷமிட்டவன் எனக் கூறாமல் புத்தருக்கு இறுதி உணவிட்டவன் என அறிவியுங்கள் என்றார். அதாவது மனிதனுக்கு முதல் உணவு தருகின்ற தாய் எப்படி மேலானவளோ அதைப்போன்று கடைசி உணவு தருபவனும் பாக்கியவானே என்றார்.

எமது எண்ணங்கள்தான் பின்பு செயல்களாகப் பரிணாமிக்கின்றன. அவை நல்லதோ கெட்டதோ என்பது பற்றிய பிரச்சனை பின்புதான் எழும். எண்ணம் என்பது தீப்பொறி போன்றது. முதலில் புகைக்கும் பின்பு கொழுந்துவிட்டெரியும். நாம் எம்மைப்பற்றி தற்பெருமைக்காக எம்மிடம் உள்ள வசதி வாய்ப்புகளை, எமது உறவுகளுக்கோ அல்லது ஏனையவர்களுக்கோ புகழ்ந்து கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்ணம் அல்லது பழக்கம் நாளடைவில் எம்முள் ஆழமாகப் பதிந்துவிடும். இதனால் நாம் மகிழ்ச்சியடைவதாக எண்ணி தொடர்ந்து எல்லோருக்கும் கூறுவோமாயின் சமூகம் சிலவேளைகளில் எம்மை தனியே விட்டுப் பிரிந்துவிடும். மாறாக எமது புகழினைக் கேட்டவர்கள் தமது மனதில் தாம் தாழ்ந்துவிட்டோமே என்ற எண்ணத்தை உருவாக்கினால் நாளடைவில் அவர்கள் மனநோயாளியாகி விடுவார்கள். ஆகவே எம்மனதில் எழும் எந்தவிதமான எண்ணங்களாக இருந்தாலும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். சரியான எண்ணங்களை மனதினில் விதைத்தால், நல்ல விளைச்சலை எதிர்பார்க்கமுடியும்.

நாம் இவ்வுலகில் நடைபெறுகின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் உண்டு என்பதனை அறியவேண்டும். காரணம் இல்லாமல் காரியம் இல்லை. மனதில் பயம் அல்லது தவிப்பு போன்ற எண்ணங்கள் எழுவதால்தான் வயிற்றில் புண் (அல்சர்) ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். அதாவது எண்ணங்கள் நமது உடலில் பல இரசாயண மாற்றங்களை ஏற்படுத்துவதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். நமது ஊரில் கோயில்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பார்த்தால் சில உண்மைகள் புரியும். காளி கோவிலில் தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறும்போது 'காளியே என்னைக் காப்பாற்றுவாள்' எனக் கூறி தீயினில் நடப்பவருக்கு எந்தப் பாதிப்பும் நிகழ்வதில்லையே. அவர் மனதில் வலிமையாக இறைநம்பிக்கை என்ற எண்ணம் இருப்பதால் அந்தத் தீ அவரை தீண்டுவதில்லை.

எமது நிலையில் நாம் கூறுகின்ற அல்லது செயல்படுத்துகின்ற ஒவ்வொரு விஷயமும் சரியானதாகத்தானிருக்கும். காரணம் அவை பிழையாகவோ அல்லது தவறானதாகவோ இருப்பின் நாமே அவற்றைத் தவிர்த்துவிடுவோம். ஏனெனில் இந்தப் பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நீதி, நியாயம், சரி, பிழை போன்ற விஷயங்கள் இயல்பிலேயே தெரிந்திருக்கும். உதாரணமாக களவு செய்வது சரியென எவரும் வாதாடமாட்டார்கள். அதே போன்று கொலை செய்வதையோ அல்லது வேறெந்த கெட்ட செயல்களையோ யாருமே அனுமதிக்கமாட்டார்கள். இதனால்தான் மரணதண்டனையே தவறு என இன்று உலகம் கூறுகிறது. இதுகூட இயேசுவின் வழியில் வந்த கதைதான்.

நமது அன்றாட வாழ்க்கைக்கு காரண காரியம் காட்டும் பகுத்தறிவு மிகமிக இன்றியமையாதது. ஒரு மருத்துவர் நோயின் பலவிதமான அறிகுறிகளைக் கண்டு நோய் இதுதான் என்பதைத் தீர்மானிக்கிறார். ஒரு வழக்கறிஞர் தனது வாதங்களைச் சோடித்து தம் பக்கமுள்ள வழக்கின் நியாயத்தை நிரூபிக்கிறார். இப்படித்தான் அனைவரும். கொலம்பஸின் வாழ்வில் நடந்த கதை ஒன்று. முட்டையைச் செங்குத்தாக நிற்க வைக்க முடியுமா? என கேட்டபோது எல்லோரும் சிந்தித்தார்கள். கொலம்பஸ் மட்டுமே அடிப்பாகத்தை ஒரு தட்டுத் தட்டி நிற்க வைத்துக் காட்டினார். இதுதான் வேறு வழிச் சிந்தனை. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்ததும் இதே போன்ற வேறுவழிச் சிந்தனையில்தான். நாமெல்லோரும் நேரடிச் சிந்தனையில்தான் வளர்க்கப்பட்டிருக்கிறோம். அதனால்தான் எதனையும் தவறாகவே சிந்திக்கிறோம்.

எமது பிரச்சனைகளை நான்கு விதமாகப் பிரிக்கலாம். அதாவது பிரச்சனை என்ன? என்னவிதமான முடிவை விரும்புகிறோம். அதனை அடையும் வழிகள் என்ன? அதில் எது நல்ல வழி என்பவையே அவை. இதில் எமது முடிவை நாம் தெளிவாக எடுக்க வேண்டும். முடிந்தால் எமது நண்பர்களிடமோ அல்லது எமது துணைவியுடனா இதனைப்பற்றிக் கலந்து ஆலோசிக்கலாம். சுருங்கக் கூறில் பிறரின் ஆலோசனைகளைக் கேட்பது இவ்விடத்தில் நல்லது.

ஆகவே நாம் நல்லவர்களாக ஏனையவர்களுக்கு மன உளைச்சலைத் தராதவர்களாக வாழ்வது என்றுமே நன்மை பயக்கும். எம்மைப்பற்றி அடுத்தவரிடம் புகழும்போது நாம் பெருமையடையலாம். ஆனால் அதனைக்கேட்பவரின் மனதை நாம் அறியமுடியுமா? என்பதனை எண்ணிப்பார்க்கவேண்டும். சிந்திப்போம்.

## கலாபூசணம் குழந்தை செபமாலை அவர்களுக்கு பாரீசில் பாராட்டுவிழா



மன்னார் முருங்கனைச் சேர்ந்த முதுபெரும் கூத்திசைக் கலைஞரும், இலங்கையின் பல பகுதிகளிலும் சென்று நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவரும், பல விருதுகளைக் குவித்து தமிழ்மக்கள் மத்தியில் கூத்திசைக் காவலராக திகழ்கின்றவருமான கலாபூஷணம் குழந்தை செபமாலை ஆசிரியர் அவர்கள் அண்மையில் பாரீசுக்கு தம் மனைவி சகிதம் வந்திருந்தார். அவருக்கு பாரீசில் வாழும் கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 16.08.2009ல் ஒரு பாராட்டு விழாவினை நடாத்தினர். ஒழுங்குகள் அனைத்தையும் ஐரோப்பிய தமிழ் இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சார்பில் அதன் தலைவர் திரு வண்ணைத் தெய்வம், செயலாளர் திரு கே.பி.லோகதாஸ் ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தனர். விழாவில் பிரான்சை சேர்ந்த கலைஞர்கள் , உறவினர்கள், நண்பர்கள், முருங்கனைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பாராட்டு விழாவிற்கு மூத்த கலைஞர் திரு ஏ.ரகுநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். சிறப்புப் பேச்சாளர்களாக கலைஞர் டேவிற் இராஜேந்திரம், கலைஞர் டேமியன் சூரி ஆகியோர் கலந்துகொண்டனர். திரு.ரகுநாதன் அவர்கள் நாட்டுக்கூத்து, ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் மறக்கப்படமுடியாது தேசிய கலை எனக்கூறி அதை பாதுகாக்க அயராது உழைத்து, அர்ப்பணித்து வரும் குழந்தை செபமாலை அவர்களை மனதாரப் பாராட்டுவது பொருத்தமானது என கரகோசங்களுக்கு மத்தியில் எடுத்துரைத்தார். பின்னர் பேசிய கலைஞர் டேவிற் இராஜேந்திரம் அவர்கள் தாம் இலங்கை வானொலியில் பணியாற்றிய வேளையில் நாட்டார் பாடல்களை அறிமுகப்படுத்தும் பணி வழங்கப்பட்டதாகவும், அப்போது முருங்கனிலிருந்து முதல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர் குழந்தை செபமாலை எனக்கூறி அவரது திறமைகளையும், அவருடனான தமது ஞாபகங்களையும் நினைவுகூர்ந்தார். திரு டேமியன் சூரி அவர்கள் நாட்டுக்கூத்தில் அவரது சிறந்த பாடல்கள், துடிப்புள்ள ஆட்டங்கள் பற்றிக் கூறி அவரை பாராட்டினார். பின்னர் அவருக்கு பொன்னாடை போர்த்தி, ஞாபக பரிசில்கள் வழங்கி விழா அமைப்பாளர்களால் கௌரவம் செலுத்தப்பட்டது. அவரது திறமைகளை எடுத்தியம்பும் நோக்கமாக பழைய கூத்துக்களின் வீடியோ காட்சிகளும், அவரது நேர்காணலும் திரையில் காட்டப்பட்டது. தமது பங்குக்கு திருமறைக்கலாமன்றம் பிரான்ஸ் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது. முற்றம் சஞ்சிகை சார்பாகவும் இவ்வேளை அவரது கலைப்பணி சிறக்க பாராட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசோப் கதைகள்

யசோதரன்

## நாட்டுப்புறச் சுண்டெலியும் நகர்புறச் சுண்டெலியும்

வயல் வாழும் சுண்டெலி ஒன்று நகர்ப்புற வீட்டில் வசிக்கும் சுண்டெலியை விருந்துக்கு அழைத்தது. அழைப்பை ஏற்றுக்கொண்டு விருந்துக்குச் சென்றது நகர்புறச் சுண்டெலி. விருந்தில் பார்லியும் வேறு தானியவகைகளும் இருப்பதைக்கண்ட நகர்ப்புறச் சுண்டெலி வயல்புறச் சுண்டெலியைப் பார்த்து கூறியது □நான் சில விஷயங்களைச் சொல்ல நீ அனுமதிக்க வேண்டும். உனது வாழ்க்கை ஏறும்பைப் போன்றது. உன்னுடைய அழைப்பின் காரணமாக நான் எனக்குரிய சுவைமிகுந்த பொருட்களை இழந்தேன். எனவே நீ என்னுடன் எனது வீட்டிற்கு வந்தால் அச் சுவையான உணவுகளை நாம் இருவரும் பகிர்ந்து கொள்ளலாம் என்றது. இதன்படி அவை இரண்டும் நகர்ப்புற வீட்டிற்குச் சென்றது. நகர்ப்புற வீட்டின் சுண்டெலி தனது நண்பனுக்கு பட்டாணிக்கடலை, அவரை, பாண், பேரீச்சம்பழம், பாலாடைக்கட்டி, தேன், பழங்கள் ஆகியவற்றைத் பெருமையுடன் காட்டியது. வியப்படைந்த வயல்புறச் சுண்டெலி, நகர்ப்புறச் சுண்டெலியை மனதார வாழ்த்தியதுடன் தனது நிலையை எண்ணி தன்னைத்தானே சபித்தும் கொண்டது. இரண்டும் தமது உணவை ஆவலுடன் உண்ணத் தொடங்குகையில், சடுதியாகக் கதவு திறந்து கொண்டது. கதவு திறபட்ட சத்தத்தினால் திகில் கொண்ட இரண்டும் அங்குள்ள சிறு துவாரத்தினூடக ஓடிச்சென்று மறைந்துகொண்டது. சிறிது நேரத்தின் பின் திரும்பிவந்து மீண்டும் அவை தமது உணவிலுள்ள உலர்ந்த அத்திப்பழத்தை உண்ண முயல்கையில், வேறொருவர் ஏதோ பொருட்களை எடுப்பதற்காக மீண்டும் கதவைத் திறந்து வந்தார். மீண்டும் அவைகள் பயத்தில் ஓடி ஒளித்துக்கொண்டது. அப்போது வயற்புறச் சுண்டெலி தனக்குப் பசி எடுக்கும் எந்த வேளையிலும் எந்தக் கவலையும் இல்லாது உண்பதை நினைத்துக்கொண்டது. உடனே தனது நண்பனைப் பார்த்து **நண்பா நீ உனது உணவை மகிழ்ச்சியாக நிறைவு செய்துகொள்ளலாம் ஆனால் உனது உணவு பயத்துடனும் ஆபத்துடனும் கூடியவை. என்னுடைய உணவு எளிமையான உணவுதான். எனது கண்களுக்கு அப்பால் எவரையாவது பயத்துடன் கவனித்துக்கொள்ளாமல் நான் அவற்றைக் கொறித்துக்கொள்ளலாம். எனவே சென்றுவருகிறேன்** எனக் கூறியது.

பயத்தில் மனச்சித்திரவதைகளை அனுபவித்துக்கொண்டு ஆடம்பரமாக வாழ்வதைவிட, அமைதியான எளிமையான வாழ்க்கை மேன்மையானது.

## நன்றி மறவாமை

தூங்கிக்கொண்டிருந்த சிங்கத்தின்மேல், சுண்டெலி ஒன்று ஓடி விளையாடிக்கொண்டிருந்தது. தூக்கம் கலைந்த சிங்கம் அதைப் பிடித்துக்கொண்டு தனக்கு இரையாக்க எண்ணியது. பயத்தில் பதறிய சுண்டெலி தன்னை விடுவிக்குமாறு இரந்தது. இப்போது தனக்கு உயிர்ப்பிச்சை அழித்தால் இதற்குத் தகுந்த பிரதியுபகாரம் செய்வதாகக் கூறியது. இதைக் கேட்டுச் சிரித்த சிங்கம் சுண்டெலிக்கு உயிர்ப் பிச்சை அளித்தது. இது நடந்து சில நாட்களின் பின் வேடன் ஒருவனால் மரத்தோடு சேர்த்து கட்டி விரித்த வலையில் அச் சிங்கம் மாட்டிக்கொண்டது. வலையிலிருந்து வெளியேற முயன்றும் முடியாத சிங்கம் அலறியது. அலறல் சத்தம் கேட்ட சுண்டெலி உடனே அங்கு விரைந்து வந்தது. தன் கூரிய பற்களால் வலையை அறுத்து சிங்கத்தை விடுதலை செய்தது. பின் அது சிங்கத்தைப் பார்த்து **அன்று நான் பிரதியுபகாரம் செய்வேன் என்று கூறியபொழுது நீர் சிரித்துக்கொண்டீர் ஏனென்றால் உமது உதவிக்கு நான் பதிலுபகாரம் செய்வேன்றென்று எதிர்பாத்திருக்கவில்லை அப்படித்தானே? இப்போது பார்த்தாயா சுண்டெலிகள்கூட மேலானவைகள்தான்** என்றது.

வலியையுள்ள மனிதர்கள் வலிமையற்ற மனிதர்களின் உதவியை நாடும் ஒரு சந்தர்ப்பத்தை காலம் உருவாக்கிவிடுகிறது.

## முன்னேற்பாடு

காட்டுப்பண்றி ஒன்று, தனது நீண்ட கடவாய்ப் பற்களை மரத்தில் உரசி உரசிக் கூர்மைப்படுத்திக்கொண்டிருந்தது. அதனைப்பார்த்த நரி **இப்போது உன்னைத் துரத்தும் ஒரு வேட்டைக்காரனும் இங்கு இல்லை. உனக்கான எந்த ஆபத்தும் இல்லை. அப்படியிருக்கையில் ஏன் உனது பற்களைக் கூர்மைப்படுத்துகிறாய்?** என்று கேட்டது. எல்லாம் காரணத்தோடுதான் என்ற பின் அது மேலும் தொடர்ந்து **ஆபத்து ஏதிர்கொள்ளும்போது நான் இவ்வாறு கூராக்கிக்கொள்வதற்கு எனக்கு அப்போது நேரம் இருப்பதில்லை. எனவே இப்போதே அதற்காக தயாராக்கிக் கொள்கிறேன்** என்று கூறியது.

ஆபத்து அருகில் வரும்வரை காத்திருக்காமல் முற்பாதுகாப்பினை மேற்கொள்ள வேண்டும்.

## உன்னடியார்போல் நடித்து

ஆட்டுக்கூட்டம் ஒன்றினை ஓநாய் ஒன்று மிகச் சாதுபோல் பின்தொடர்ந்தது. அது ஆட்டு மந்தைக்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை. இடையன் பயத்தில் ஒரு எதிரியைப்போல் ஓநாயைக் கவனித்தான். ஆனால் ஓநாய், மந்தைக்கு எவ்வித தீங்கும் இழைக்காமல் அவைகளுடன் சேர்ந்திருந்தது. **ஓநாய் நான் நினைத்ததுபோல் பகைவன் அல்ல. அவைகளின் காவலன்.** ஏன எண்ணினான் இடையன். அவன் நகருக்குச் சென்றுவரும் தேவை வந்தபொழுது, தனது மந்தையினை ஓநாயின் மேற்பார்வையில் விட்டுவிட்டுச் சென்றான். சந்தர்ப்பம் வாய்த்ததைக் கண்ட ஓநாய், மந்தைகள் மேல் பாய்ந்து அவற்றைக் கொன்றன. நகரத்திலிருந்து திரும்பிய இடையன் தன் மந்தைகளின் அழிவைக் கண்டு புலம்பியபடி **ஆடுகளுக்கு காவலாக ஓநாயை நம்பியதற்கு எனக்கு எது தகுதியோ அதைப் பெற்றுக் கொண்டேன்** என்றான்.

மனிதர்களும் இவ்வாறே. பணத்தைச் சுருட்டுபவர்களிடம் அவர்கள் அபகரித்துகொள்வார்கள் எனத் தெரிந்தும் அவர்களிடம் பெறுமதியானவற்றைப் பாதுகாக்கக் கொடுத்துவிடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்களும் முகங்களும்

டேமியன் சூரி

இயக்குனரின் பணிப்பின் பேரில் நாடகக் கொப்பியை பாடமாக்கும் வேலையை நான் ஓரளவு முடித்திருந்தேன். அந்த வயதில் எனக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகமாக இருந்தது. வெகுவிரைவில் எதையும் பாடமாக்கும் ஆற்றல் என்னுள் நிறைந்திருந்தது. எனவே நடிகனாகவும், அரங்க அமைப்பாளர்களில் ஒருவனாக இருப்பதில் எனக்கு சிரமமிருக்கவில்லை. அரங்க அமைப்புக்குழுவில் அங்கம் வகித்த நாங்கள் எவரும் உறவினர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை. நடிகர்களைவிட பொறுப்பும் வேலைப்பளுவும் அதிகமாகையால் நாம் மண்டபத்திற்கு அருகில் அமைந்திருந்த கல்விக்கூட அறையில் தங்கினோம். இரவு உணவை கல்லூரிக்கு பக்கத்தில் அமைந்திருந்த சைவ உணவகத்தில் வாங்கி உண்டோம். சைவக்கடைச் சாப்பாடு எமக்கு புதிதாகையால் சாப்பாடு மனதிற்கு நிறைவையும் அளித்தது. பின்னர் இரவு உறக்கத்திற்கு சென்றோம். விடியற்காலை 6மணிக்கு எங்கள் பொறுப்பாளர் நெல்சன் அவர்கள் எங்கள் அனைவரையும் எழுப்பினார். உடற்சோர்வு உடன் துயில்எழ இடம் கொடுக்காத பொழுதிலும் இன்னும் கொஞ்சம் படுத்திருந்தால் நல்லாயிருக்கும் என்ற எண்ணத்தோடு புறுபுறுத்தபடி எழும்பினோம். இருப்பினும் எமது பயணத்தின் நோக்கத்தை மாற்றமுடியுமா? எங்கள்காலைக்கடன்களை விரைவாக முடித்து காலை உணவை கடையில் உண்டோம். பின்னர் உடன் மண்டபத்திற்கு திரும்பி செற்றிங்ஸ் களை பூட்டும் வேலையைத் தொடங்கி மதியம் 12 மணியளவில் சகல வேலைகளையும் கஷ்டப்பட்டு முடித்துக்கொண்டோம்.

இவ்வேளை பார்த்து இயக்குனரின் வருகை எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவர் நெல்சனைக் கூப்பிட்டு **பலிக்களம் ஓரங்க நாடகமாகையால் காட்சிக்கு காட்சி எந்தவித இடைவெளியும் இருக்கக்கூடாது. எந்தவேளையும் ஏதாவதொரு ஆள் மேடையில் இருக்கவேண்டும்.** எனவே ஒத்திகை பார்க்க அனைவரையும் அழைத்து வரும்படி கேட்டுக்கொண்டார். நாடகத்தில் யூதச் சங்கத்தினரின் முன் இயேசுவின் விசாரணை, அதற்காக ஒரு விசேட மேடையமைப்பு. பின்னர் பிலாத்துவின் விசாரணை, அதற்கு வேறோரு மேடை அமைப்பு. இப்படி மேடைக்காட்சிகள் உடனுக்குடன் மாறும். அதை நாம் குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கவேண்டும். முதல்விசாரணை முடிந்தபின்னர் இயேசுவை இழுத்துக்கொண்டு பிலாத்து அரண்மனைக்கு போவார்கள். இவ்வேளை **யார் நீ இறைவா** என்ற பாட்டு பின்னணியில் ஒலிக்கும். இப்பாடல் நடக்கும் பொழுது இயேசு மேடையை விட்டு வெளியேற முன்னால் கேட்டின் சீலை இறங்கவேண்டும், அதே வேளை அப்பாடலுக்கு நடித்தபடி இராயப்பரும், யூதாசும் தோன்றுவார்கள். அவர்கள் மேடையில் நிற்கும் நேரம் இரண்டு நிமிடங்கள். அதற்குள் பின்னால் இருந்த யூதச் சங்கத்திற்குரிய செற்றிங்ஸ் மாற்றப்பட்டு பிலாத்துவின் செற்றிங்ஸ் அதேயிடத்தில் அமையவேண்டும். நாங்களும் ஒத்திகை பார்ப்பதற்கு தயாரானோம். இயக்குனர் நேரத்தைப் பார்த்தபடி ஸராட் எனக்கூறியதும் ஒத்திகை ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் செற்றிங்ஸ் மாற்றுவதற்கு நாலு நிமிடங்கள் எடுத்தது. இயக்குனரும் எங்களை விடுவதாக இல்லை. குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கும்வரை உங்களை விடப்போவதில்லை எனக்கூறிக்கொண்டு திரும்பவும் திரும்பவும் எங்களை ஒத்திகை செய்ய வைத்தார். எங்கள் முயற்சி ஆறாவது தடவையாக பலனளித்தது. இயக்குனரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எங்கள் அனைவரினதும் முதுகில் தட்டிப் பாராட்டினார். ஒத்திகை முடிந்த பின்னர் பிற்பகல் ஒன்றரை மணிக்கு நாம் மதிய உணவுக்காச் சென்றோம். நாங்கள் திரும்பி வரும்பொழுது பிற்பகல் இரண்டு மணியாகியிருந்தது. அப்பொழுது நடிகர்கள் அனைவரும் மேக்கப் செய்யத் தொடங்கவேண்டிய நேரம். ஆனால் முதல்நாள் நண்பர்கள் வீட்டுக்கு தங்கச் சென்ற சில நடிகர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பி வரவில்லை. அதனால் இயக்குனர் மிகவும் கோபமாக இருந்தார். நாங்கள் எவரும் அவருக்கு கிட்டே செல்லவில்லை. ஏனெனில் அவரது கோபம் திசைதிரும்பினால் யார்என்று கூட பார்க்காமல் தண்டித்துவிடுவார். அதனால் செற்றிங்ஸ் குழுவினராகிய நாம் தூரவே நின்றுகொண்டு நடப்பதை வேடிக்கை பார்த்தோம்.

ஒருவர் பின் ஒருவராக நேரம் பிந்திப் பிந்தி நடிகர்கள் வந்து கொண்டிருந்தனர். சரியாக மூன்று மணியிருக்கும் இன்னும் ஒரே ஒரு நடிகரைக் காணவில்லை. இராயப்பர் பாத்திரம் ஏற்ற தைரியநாதன் அவர்கள் தான் அவர். இயக்குனர் என்னிடம் வந்து நீ உடுப்பை போடு என்றார். நானும் மறுவார்த்தை பேசாமல் மேக்கப்போடச் சென்றேன். உடனே முகப்பூச்சு பூசப்பட்டு உடுப்பும் உடுத்தப்பட்டது. கிட்டத்தட்ட நான்கு மணியிருக்கும் எங்கேயோ இருந்து தைரியநாதன் களைக்க களைக்க வந்து கொண்டிருந்தார். அவ்வேளை இயக்குனர் தேனீர் அருந்துவதற்கு வெளியில் சென்றுவிட்டதால் விபரீதம் எதுவும் நடக்கவில்லை. நான் உடன் உடுப்பைக் களற்றி அவரை உடுத்தும்படி கேட்டுக்கொண்டேன். நாடகம் பி.ப 6மணிக்கு தொடங்கவேண்டும். இயக்குனர் மேடைக்கு நாலரை மணிக்கு வந்தார். அவ்வேளை தைரியநாதன் உடுப்புடன் ஆயத்தாமாக நின்றார். அவர் மீது இயக்குனருக்கு கோபம் இருந்தபொழுதிலும் எல்லாம் சரியாக நடக்கக் கூடியவிதமாக தடங்கல் நீங்கியபடியால் தொடக்க வேலையில் கவனம் செலுத்தினார். எனக்கும், நான் சார்ந்த செற்றிங்ஸ் குழுவினருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. ஏனெனில் செற்றிங்ஸ் மாற்ற ஒரு ஆள் குறைந்தாலும் கூட திட்டமிட்ட நேரத்திற்குள் அதைச் செய்து முடிக்க முடியாமல் போய்விடும். எனவே மகிழ்ச்சியோடு நாடக மேடையேற்றத்திற்காக ஆயத்தமானோம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org